செ.வெ.எண்:46 நாள்:27.07.2021

**நாகப்பட்டினம் மாவட்டம் கீழ்வேளூர் ஒன்றியம் ஊரக வளர்ச்சி துறையின் வளர்ச்சித் திட்ட பணிகளை மாவட்ட ஆட்சித் தலைவர் மருத்துவர்.அ.அருண்தம்புராஜ் இ.ஆ.ப., அவர்கள் ஆய்வு செய்தார்.**

நாகப்பட்டினம் மாவட்டம் கீழ்வேளூர் ஒன்றியம் ஊரக வளர்ச்சி துறையின் வளர்ச்சித் திட்ட பணிகளை மாவட்ட ஆட்சித் தலைவர் மருத்துவர்.அ.அருண்தம்புராஜ் இ.ஆ.ப., அவர்கள் ஆய்வு செய்தார்.

நாகப்பட்டினம் மாவட்டம் கீழ்வேளூர் ஒன்றியம் திருக்கண்ணங்குடி ஊராட்சியில் பாரத பிரதமரின் வீடு கட்டும் திட்டத்தின் கீழ் 2016 – 2019 நிதியாண்டிற்கு வழங்கப்பட்ட மொத்தம் 143 வீடுகளில் 43 வீடுகள் முடிவுற்றது. மீதமுள்ள 100 வீடுகளை விரைந்து கட்டி முடித்திட உத்தரவிட்டும், பசுமை வீடு திட்டத்தின் கீழ் கட்டிய வீட்டையும் திருக்கண்ணங்குடி அங்கன்வாடி மைய கட்டிடத்தையும் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

அகரகடம்பனூர் ஊராட்சி பாண்டிசோழ மங்கல கிராமத்தில் தனிநபர் கழிப்பறை (NOLB) மொத்தம் 224ல் 163 பணிகள் முடிவுற்றது. மீதமுள்ள 61 தனி நபர் கழிப்பறை கட்டும் பணிகளை விரைந்து முடித்திடவும், புத்தர்மங்கலத்தில் TNRRIS 2020-2021 திட்டத்தின் கீழ் நடைபெற்று வரும் சாலை அமைக்கும் பணியையும் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

இலுப்பூர் ஊராட்சியில் பாரத பிரதம மந்திரி கிராம யோஜனா திட்டத்தின் கீழ் செருநல்லூர் ஊராட்சி செம்பியா நத்தூர் முதல் இலுப்பூர் வடக்காலத்தூர் வரை ரூ.294.46 இலட்சம் மதிப்பீட்டில் 4.38கி.மீ தூரம் நடைபெறும் சாலை பணிகளை ஆய்வு செய்தார்.

இருக்கை ஊராட்சியில் மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை வாய்ப்பு திட்டத்தின் கீழ் ரூ.13.50 இலட்சம் மதிப்பீட்டில் 10 மாட்டு கொட்டகை அமைக்கப்பட்டுள்ளதையும், இருக்கை முதல் இரிஞ்சூர் வரை ரூ.48.4 இலட்சம் மதிப்பீட்டில் 2.2 கி.மீ. ஓர் அடுக்கு கருங்கல் கப்பி இணைப்பு சாலை அமைத்து முடிந்த பணியையும், தனி நபர் நீர் உறிஞ்சி குழியை ரூ.4.85 இலட்சம் மதிப்பீட்டில் மொத்தம் 50 குழி அமைக்கப்பட்டுள்ளதையும் மாவட்ட ஆட்சியர் ஆய்வு செய்தார்.

இராதாமங்கலம் ஊராட்சி நாகவிளாகம் கிராமத்தில் மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை வாய்ப்பு திட்டத்தின் கீழ் ரூ.8.17 இலட்சம் மதிப்பீட்டில் ஆதிதிராவிடர் சிமெண்ட் சாலை அமைக்கப்பட்டுள்ளதையும் மாவட்ட ஆட்சித் தலைவர் மருத்துவர்.அ.அருண்தம்புராஜ் இ.ஆ.ப., அவர்கள் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

இந்த ஆய்வின்போது மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர்(பொறுப்பு) திரு.வி.செல்வராஜ், வட்டார வளர்ச்சி அலுவலர்கள் வே.தியாகராஜன், எல்.இராஜகோபால், உதவி பொறியாளர்கள் ஜான் பிரிட்டோ, டி.இரவிச்சந்திரன், மற்றும் அரசு அலுவலர்கள் உடன் இருந்தனர்.

**செய்தி வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், நாகப்பட்டினம்.**